உ.
கணபதி துணை.
திருச்சிற்றம்பலம்.

சுழிபுரம்

# பறாளாவிநாயகர் பள்ளுப்பிரபந்தம்.

இஃது
யாழ்ப்பாணத்து
நல்லூர்ச்
## சின்னத்தம்பிநாவலரவர்கள்
இயற்றியது.

வே - இரத்தினபிள்ளையவர்கள்
வேண்டுகோளின்படி
தமிழ்ப்பண்டிதர்
## ச. சிவப்பிரகாசபிள்ளையவர்களால்
பரிசோதித்து,

சபாபதிநாவலரவர்களது
சித்தாந்தவித்தியாநுபாலனயந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சென்னை: ஏகவல்லியம்மன் கோயில் வீதி-79.
விரோதி௵ சித்திரைமீ
இதன் விலை அணா - ௨.

Copy-Right Registered.

V. A. MAIN ST. TRINCOMALEE

கணபதிதுணை.

# பறாளைவிநாயகர் பள்ளு.

காப்பு - வெண்பா:

தொல்லுலகம் போற்றுஞ் சுழிபுரம் வாழைங்கரன்மேற்
பல்வளஞ்சேர் பள்ளினிசை பாடவே - வில்வழங்கு
மையாழிக் கண்ணன் மலர்க்கண் வளர்ந்ததிருங்
கையாழிக் கண்ணனே காப்பு.

விநாயகவணக்கம் - கலித்துறை.

நந்துதவழந்திதனிலாம்பனனிமலருஞ்
சுந்தரஞ்சேரும்பழனப்பறாளையிற்றோன்றுசுடர்
வந்தெதிர்கின்றகயமுகன்றன்னைவதைத்ததந்த
வைந்துகரப்பிள்ளையென்னகத்தேநின்றருள்செய்யுமே.

நடேசர் துதி - சந்தவிருத்தம்.

சுருதியின்முதலாகியகாரணர் துளைபொலிகரவாரணமா
முகர் சுழிபுரநகர்மேவுபறாளையிலுறைநாதர், கருமணிவிழியா
ளுமைபாலகர்கதிரையின்வடிவேலர்சகோதரர்கருணையின்மத
தாரையினர்பள்ளினிசையோதச், செருமருவுதிரிசூலவாயுத
ர்திரிதிரிபுரகோபரனுமையர்திகழிரணியமேருசராசனர் பணிநா
ணர், பொருமுழுவையினுரியாடையர் புரிசடைவளைசோ
மகலாதரர் பொதுவினிடமாடியசேவடிமறவேனே.

சிவகாமியம்மை துதி-சிந்து.

தோட்டுவாரிசநான்முகன்பேணியதும்பி மாமுகனம்புவி
தாங்கிய, சேட்டுமேருவின்பாரதந்தீட்டியதென்பறாளைப்பா

ஞ்சோதியன்னே, கோட்டுவாரணிகொங்கைப்பெருக்குங்குழ ற்சுருக்குமணிவாய்முருக்கும்பைஞ், சூட்டுசிறடியுந்துடிநேரி டையுடையுமெங்கணுமென்கணினின்றவே.

## பள்ளிதோற்றம்-வேறு.

குத்துமுலைக்குவடுகுலுங்கத் தரளவடம் புரளக்குமுத ச்செவ்வாயின்வெள்ளிநகையரும்பத், தத்துவரிக்கயலைவெரு ட்டிப்பத்திமணிக்குழையொடுமுட்டித்தாரைமணிக்கண்களிர ண்டுந்தாவடிசெல்லச், சித்தியளித்திடுசுழிபுரநகருறை யத்தி முகக்கணபதிபணபதிச்சேடனுநாவாலசைக்கரியசீரிசைபாடி, யெத்திசையும்புகழ நிதிக்கோனள காபுரியென்றெவருமதிக்கு ஞ்சோழமண்டலப்பள்ளிதோற்றினளே. (க)

சின்னவிடை நூலிறுமிறுமெனச்சிறடியிற்சிலம்புபுலம்பச் சிறியநுதற்பிறையணிவட்டச்சுட்டியிலங்கப்,பொன்னசலக்கு சமதினவமணிமின்னுதனக்கச்சுநெகிழப் புனைந்தகருங்கொண் டையில்வண்டுபுரண்டுநெருங்கச், சென்னெல்வயற் சுழிபுரநக ருறைகன்னமதத்திறையவர்பரிபுரசேவடியைத் திக்குநோக்கி த்தெண்டம்பண்ணிச், சொன்னநிலத்துறுவசியிவளென வன் னமெனப்பிடியென நிதிவளர் சோழமண்டலப்பள்ளிதோற்றி னளே. (௨)

தோடார்குழலசைய நுதல்வேர்வரும்பியெழத் துடியுங் கொடியுமன்னமருங்குனெருங்கக்,கோடானவைகுலுங்கமணி மேகலைகளார்ப்பக் குழையுங் கயலுஞ்சென்று நின்றாடவே, நீடானையேறுசந்திர சூடாமணிக்குவந்த நித்தன் பாரதக்க தையையாடகக்குன்றை, யேடாகவெழுதிஞேன்றிருநாமம்பா டியாடுஞ்சோழமண்டலத்தினிற்பள்ளிநானே. (ங.)

கோங்கிளம்புதியமுகைக்கொங்கைக்கௌரி மைந்தன் கூறு புகழ்க்கல்லாமல்நாவசையார், தாங்குபணியரையிற்பூட்டுபிரா ன்பங்கயத்தாளுக்கல்லாமற் சென்னிசற்றும்வணங்கார், வீங்

குகடல்குடங்கைக் கொண்டான் காகநீர்பூவிட்டான்கோயிலையன்றிச் சூழ்ந்துதுதியார், தூங்குதழை செவியன்பத்திமைத் தொண்டர்வாழுஞ்சோழமண்டலத்தினிற்பள்ளிநானே. (௪)

## பள்ளன் - தோற்றம்.

சுற்றுகருங்கச்சைகட்டி. மாதளம்பூவுறுமால் சோரவிட்டுக்கட்டித்துள்ளுமீசைமுறுக்கி, வெற்றியாக்குங்குடித்து நீற்றையும் பெருக்கப்பூசிமேல்வளையலுந்தரித்து விழிகள்சிவந்து, மற்றியமண்வெட்டிவைத்துச் சறுக்கிநடந்து தங்கப்பாளத்தாற்சமைத்த கொட்டுத் தோளிற் சுமந்து, எற்றவருமொற்றைமணிக்கொற்றக்கொம்பன் பண்ணைபார்க்குமீழமண்டலப்பள்ளன் தோற்றினனே. (௫)

## கொச்சகம்.

பொய்யூருமிடைக்கௌரி புதல்வனெழிற்புரிக்கோடு
செய்யூருஞ்சுழிபுரத்துச்சேர்ந்தபருளையிலுறையு
மையூர்முத்தானவள்ளல் மணிநாட்டுவளம்பேசப்
பையூருங்கனிநிதம்பப்பள்ளியர்நாவசைத்தாரே. (௬)

## நாட்டுவியப்பு - சிந்து.

போற்றுமாதுளமாணிக்கவித்தைப்பொதிந்தசோதிக்கனி பலதூக்கும், தாற்றுவாழையிலைசென்று மாகத்தரணிமேலாலவட்டமசைக்கும், தோற்றுமாசினி முட்புறச்செம்பழஞ்சுட்டபொன்னின்சுளைபலதூற்று, மேற்றுவாளைகமுகிற்குதித்திடு மீழமண்டல நாடெங்கணுடே. (௭)

காடெல்லாங்கரி மான்மதஞ்சேருங்கடலெல்லாம்வெள்வலம்புரியூரும், நாடெல்லாங்கதிர்ச் சாலிதழைக்கும் நகரம்பெல்லாமிசை யேழையழைக்கும், வீடெல்லாம்வெள்ளைப் பாட்டொலிபூணும்விண் மீனெல்லாந் தண்டலைத் தலைகாணும், தோடெல்லாம்பொறி வண்டுபண்பாடிய சோழமண்டலநாடெங்கணுடே. (௮)

கண்ணகன்றவளைத் தலைச்செம்மணிக்காந்திதூயநந்தாவி ளக்கோர்பால், வண்ணவேய்ங்குழலூ தண்டராவின்மணியி னோசைகறங்குவ தோர்பால், பண்ணையோதிமக் கூட்டமு மோர்பால் பவளக்கொம்பிற்கம்பூர்வதுமோர்பால், எண்ணினு னிலமும்புடையோங்கிய வீழமண்டல நாடெங்கணுமே. (கூ)

மின்னுங்காருங் கரும்புமுத்தீனுவிண்மீனுமீனுமணிமு த்தமீனு, முன்னுங்கார்மதவேழமுஞ் சேர்கழையோங்கல் வேழமுமாரம்பயக்கும், பன்னுஞ்சீதளப் பங்கையராசியும்பா ண் மிக்கூனற்பணிலமுஞ்செங்கார், துன்னுஞ்சாலிக் குழாமும் நிறைந்தொளிர்சோழமண்டல நாடெங்கணுமே. (க0)

கோரந்தோய்ந்தவரியஞ்சனத்தின் குழம்புதோய்விழிக் கொம்பனையார்தா, மாரந்தோய்ந்தகளபக் கடாசலமன்பனு ர்புயக்கந்தினிற்பூட்ட, வாரந்தோய்சந்தனமணந் தோய்ந்து வயங்குமின்னிசைத் தண்டமிழ்தோய்ந்தே, ஈரந்தோயுமிளந் தென்றல்வந்தசை யீழமண்டல நாடெங்கணுமே. (கக)

நீரிலேபுண்டரீக மரும்பும் நிழலிலே கருமேதியுறங்கும், வாரிலேவெண்டரளநிலாவும் வரம்பிலேசென்னெற்பூங் குலை சாயும், போரிலேகென்மணிக்குவைசேரும் பொறியிலேகரும் பாடுங்கரும்பின், றாரிலேகமடங்கண்வளர்ந்திடு சோழமண்ட லநாடெங்கணுமே. (கஉ)

மஞ்சளாவியமாடங்கடோறும் மயில்கள்போல் மடவார் கணஞ்சூழும், அஞ்சரோருகப் பள்ளியில்வான் சிறை யன்ன வன்னக்குழாம் விளையாடுந், துஞ்சுமேதிசுருக்களைச்சிறச்சுரு க்களோடிப்பலாக்கனிகீறி, யிஞ்சிவேலியின் மஞ்சலிற்போய் விழுமீழமண்டல நாடெங்கணுமே. (கங)

தண்டபாணி யிறைஞ்சுபதாம்புயத் தாணுநாதன்றிகாம் பரத்தூயன், பண்டைநாகணை யானும்விரிஞ்சனும்பாதஞ் செ ன்னியறியாதகம்பன், அண்டர்நாயகற் கற்புதப் தென வரிக

ளேந்திய ஆலையவெற்பைத், துண்டவான்கழுகென்றும் வலம்வருஞ்சோழமண்டல நாடெங்கணுடே. (௧௪)

அருவியோதையிழுமெனுங் குன்றிலடைந்தசாரற் குளிர்புனமீது, உருவுசேர்தினைப்பூங் கதிர்மேற்கிளி யோச்சவேண்டிப்புலிநகத்தாலி, மருவுவண்குறப்பேதையர்கட்செவி மாசுணப்பணநேர்கவண்மீதி, யிருளிலாதமணிவைத் தெறிந்திடுமீழமண்டல நாடெங்கணுடே. (௧௫)

மாலைதோறுமிசைவனவண்டுமென் மாதர்நூலிடை யேயுய்யுந்துவண்டு, வேலைதோறும் பயில்வனசங்கம் வியன்கழகந்தோறுந் தமிழ்ச்சங்கம், ஆலைதோறும் பொழிவன சாறு பொன்னனவிதியரியரன்சாறு, சோலைதோறுமலர்த்தாதிறைத்திடுஞ் சோழமண்டலநாடெங்கணுடே. (௧௬)

பைப்பணிப்பகுவாய்ப் பட்டதிங்களிற் பாயுமோதக்கடற்கரைதோறும், இப்பிவாயின் முத்தமிலங்கிய வீழமண்டல நாடெங்கணுடே. (௧௭)

மாரிமேகந்தவழ்மலைச்சாரலின்மந்திவைத்தமணிப் பத்மராகஞ், சூரியோதயம்போல விளங்கியசோழமண்டலநாடெங்கணுடே. (௧௮)

பரப்புமேகலைமங்கையர்போகம் பயிலவேண்டி யிணங்கார்முகத்தை, யிரப்பதேயன்றி வேறிரப்பில்லாத வீழமண்டலநாடெங்கணுடே. (௧௯)

வாமமேகலைப்பாவையர்கோவை வதனம்போல விளங்கியவிண்ணிற், சோமன்மேலன்றியோர்மறுவில்லாத சோழமண்டல நாடெங்கணுடே. (௨௦)

வளமைசேர்ந்திடு மூப்பியலான்முது மந்திதாவிமலையிடைப்பாய, விளமைமந்தியுருவடிவாய்விடு மீழமண்டல நாடெங்கணுடே. (௨௧)

முன்னைநாளிற்பஞ்சானனருபன் முளரியந்தட மூழ்கி
கியபோதிற், சொன்னமேனி விளங்கியெழுந்திடு சோழமண்
டலநாடெங்களுடே. (௨௨)

உறைத்தவானிந்து காந்தச்சிலைவிட்டுருகுநீர்ப் பிரவாக
ங்களோடி, யிறைத்தவேலைப்புலால் வெடிமாற்றிடுமீழ மண்
டலநாடெங்களுடே. (௨௩)

பகுத்தவந்தணர் சாலைகடோறும் பயிலும்வேதத் தொ
லிப்பண்ணைமீதிற், றொகுத்தமள்ளர்குரவையை மாற்றிற்
றிடுசோழமண்டல நாடெங்களுடே. (௨௪)

பண்ணிற்றோயப் பொருண்முடிப்புக்கட்டிப் பாடும்பாவ
லர்க்கீய்ந்திடவென்றே, யெண்ணிப் பொன்முடிப்புக் கட்டி
வைத்திடுமீழமண்டலநாடெங்களுடே. (௫௨)

செல்லுஞ்சென்முடிக்குந் தளங்கண்ணிருசேலைப் போ
ன்றகடைசியர் செய்க்குச், சொல்லுஞ்சொன்முடிப்புக்கட்
டிவைத்திடுஞ்சோழமண்டல நாடெங்களுடே. (௨௬)

காந்திசேர்கண்ணிலாதவர்க்குக் கண்ணுங்காட்சியுந் தந்
துசூற்பனைச்செவ்வே, லேந்தல்சேர்கதிராபுரி சேர்ந்திடு மீ
ழமண்டல நாடெங்களுடே. (௨௭)

பொங்குகூளிபிடித்தவர்க்குங் கூளிபோக்கியிக்கலிமீதி
னிற் செவ்வேற், றுங்கமுத்தையன் விற்றிருக்கும்புரிச் சோ
ழமண்டலநாடெங்களுடே. (௨௮)

கயல்வரைந்த துவசன்பணிநவகண்டி மன்னன்வரராசசி
ங்க, னியல்புடன்றிருச் செங்கோனடாத்தியவீழமண்டல நா
டெங்களுடே. (௨௯)

நேரியன்சரண்புக்க புறவினிறைதனக்கு நிறையிற்புகு
ந்த, சூரியன்குடைநீழலிற்றங்கிய சோழமண்டல நாடெங்க
ளுடே. (௩௦)

கான்றசோதியி னித்திலஞ் சிந்துங்கரும்பினிற் குருத்தைக் கதிர்க்கற்றை, யின்றசாலிக்குழாஞ் சுமந்தோங்கிடு மீழமண்டலநாடெங்களுடே. (௩௧)

சாதிநாகிளந்தெங்கினிற் சாய்ந்திடு தண்குரும்பையைப் பூகதராசிச், சோதியார்பவளக்குலைதாங்கிய சோழமண்டல நாடெங்களுடே, (௩௨)

கற்றுநூலுணர்பண்டித மார்பஞ்சகாவியஞ் சட்கலைக்கடல்தோய்ந்து, மெற்றைநாளுங்கல்வித்திறம் பார்த்திடுமீழமண்டலநாடெங்களுடே. (௩௩)

திகந்தமெட்டும் வடகலை தென்கலை தேர்ந்து தேர்ந்து செழுமலர்க்காவிற், சுகந்தனக்கயற் பூவைபயிற்றிடு சோழமண்டலநாடெங்களுடே. (௩௪)

ஆட்டுமூசலி னுடமின்னார்பொன் னணிகலத்தின்மணி தெறித்தோடி, யேட்டுக் காவிற்குயிற்றுயில் மாற்றிடுமீழ மண்டலநாடெங்களுடே. (௩௫)

வாவியின்கணைகெண்டை குதிக்கமண்டேகம் பாய்ந்து செந்தாமரைப்பாயற், றூவியன்னத்தி னித்திரைமாற்றிடுசோழமண்டலநாடெங்களுடே. (௩௬)

கோலமாதவி வன்னிமரா மரங்கோங்குவேங்கை செங்குங்குமஞ்சாதி, யேலமார்கதிர்க்கற்றையை மாற்றிடு மீழமண்டலநாடெங்களுடே. (௩௭)

ஆலைதாதகிபொன்னின்ற கொன்றையரும்பு கூவிளம்பாதிரிபுன்னைச், சோலைவான முகிலைத்தரித்திடுசோழமண்டலநாடெங்களுடே. (௩௮)

கருவலம்புரிச் செங்கதிர்மாவலி கங்கையாறுபெருகிக்கரையி, னிருமருங்கினுமுத்தங் கொழித்திடு மீழமண்டலநாடெங்களுடே. (௩௯)

வள்ளியோரிற் கொடைநிறைந்தே தநுளா மண்டியேவரு காவிரியாறு, துள்ளவாளைபசும்பொனிறைத்திடு சோழமண் டல நாடெங்களுடே. (௪௦)

## வெண்பா.

அவ்வியநெஞ்சென்றுமின் றியன்பு புரிபத்தர்வினைச்
செவ்வியகோடைக்கு நிழல்செய்யுமே - வைவேற்
றுதிசெய்குருந்துக்குத் துணையாம்பருளைப்
பதியொருகோட் டுக்கற்பகம்.

குலமுறைகிளத்தல் - சிந்து.

ஆதிகாலத்திலாருயிர்யாவுமளித்தளித்துத் துடைக்கும் பிராட்டி - பாதியம்புலிவாணுதற்சத்தி நாற்பத்துமுக்கோண சக்கிரவினோதி,

தூயசோதிப்பனிவரைக் கொம்பெனுந் தோகைதன்னை மணச்சாலைதன்னு - ளாயவேதப் பிதாமகன் பேணிபமையு மோ மச்சடங்குபுரிய,

வென்றிசேர் வெள்ளுவாப்பிடரேறிய வேந்தனேமுத லெண்டிசைகாப்போர்-மன்றலுறுந்துளாய் மௌலிப்பணிவயி ரியூர்ந்திடு வைகுண்டனுதன்,

எண்ணில்கோடிவயிரவர் சூழ்ந்திட எண்ணில்கோடி யு ருத்திரர்சூழப் - பண்ணமைந்த பசும்பரியேழுடைப் பருதிவா னவரும்வந்துசூழ,

அண்டபந்தியெடுத்துக் கையம்மானை யாடுபூதகணங்க ணெருங்கப்-பண்டையூழிக்கனல்விழிச்சோதிப்பணகளுடவிச் சேடனுஞ்சூழச்,

சித்தர்சாரணர்சூழ்ந்திடநாரதன்சேருந்தும்புருயாழிசை பாடப் - பத்திவாணன் குடமுழவத்துடன் பானுகம்பன்பணி லமுழக்கத்,

தேருநாமகள் சிர்த்தியிசைக்கத்திருமடந்தைநன் சேடியு மாக - வாருலாவுகுயத்தின்கௌரியை வந்துசேவித்துபக்கலி னிற்கும்,

அமையம்மூன்றுமணிவரைக்கண்டத்ததலங்கு மங்கல நாணதுபூட்டி - இமையராசன்புனல்வார்ப்ப மால்வரையீன் றபாவைதனைக்கைப்பிடித்து,

வேட்டபின்கதி ராடகப்பூதரவில்லியும் வல்லியுமுறை போதிற் - கோட்டுமாவும் பிடியும்புணர்ச்சியிற் கூடியேவிளை யாடுதல்கண்டு,

சத்தியுஞ்சிவமும் பிடியும்மத தந்தியாகப்புணர்ந்தவ ன்னுளின் - மத்தமாவதனத்துடனோங்காரவண்ணமாய் வந் தஞானக்குழவி,

அன்னைதேவி மனோன்மணிகொங்கைய முததாரைபரு கியநேசன் - முன்னர் நின்றிகல்சூரனைவென்ற முருகவேட்கு முன்னுகிய தோன்றல்,

தந்ததந்தைபரமனுகைத்திடு தட்டேடைத் தடந்தேரச் சறுத்தோன் - முந்தநெஞ்சினெவர் நினைந்தாலு முயன்று முன்னின்று காத்தருளெம்மான்,

தூயமூவுலகும் புகழ்விசித் துதிக்கைவாய்ந்த துதிக்கை யொன்றுள்ளான் - பாயுந்தானம்படைத்திடுகாரணன் பத்த ரானவர்க் கன்பு புரிவோன்,

மார்பின்மூன்றணி நூல்புனைநாதன் மழலைத்தும்பி கு டைகொன்றைத்தாமன் - பாரதக்கதையைப்பொற்சிலம்பினி ற்பாணித்தந்தம் பறித்துப்பொறித்தோன்,

செறியும்பஞ்சதரு நிழற்சுந்தரதேவர்கோன்புரி பூசனைக் காகக் - குறுவன்பாணிகரகத்திற்பாணிகுவலயத்திற் பெருகி டச்செய்தோன்,

மோதுமோதப்பயோததிபீது முடக்குநெட்டெயிற்றுப் பணைச்சேக்கை - மாதவன்கொண்ட வன்பணிச்சாபத்தைமா ற்றிமேலும்வரந்தந்தவண்ணல்,

பங்கயங்கனிமாதுளங் கும்பம்பரப்பு நேமிகதாயுதஞ்சங்க - மங்குசந்தனுவேந்திய பாணியனுகு வாகன மூர்த்திடுநேசன், .

அந்தரத்தருஞேதையர் கோடி யருக்கர்போலவிளங்கு செம்மேனி - யெந்தைவான்சரற்காலத்துச் சந்திரனென்னத் தோற்றும் வடிவமுங் கொண்டோன்,

நாககன்னியர்தான்றெழு மைங்கரனுளுமெள்ளுண்டை மோதகஞ்சினி, பாகுசர்க்கரைமாங்கனியீங்கிவைபாரணம்புரியுந் தொந்தித்தந்தி, செருக்குமூடியராவணவஞ்சனைச் சேண்புலத்தெறிந்தாடிய வீரன்,

மருக்குலாவு வெண்டாமரைப்பீடிகை வாழுஞ்சோதியடியார்க்கெளியோன் - மாறெதிர்ந்துபொருதகயமுகவாளரக்கனைவிண்டலத்தேற்றித்,

தேறுகொன்றையுடன் வாகைவேய்ந்தவன் சில்லரிக்கண்ணிவல்லபை பாகன் - மானஞ்சேர்விக்கிறமாதித்தவேந்தன்மதிக்கசித்திரைப்பள்ளியிற்சென்று,

கானஞ்சேர் குழன்மாதையகற்றுதிநாளையென்று கனவினிற்சொன்ஞேன் - ஆமையேன மழுப்படைச்செங்கையராகுராமர் குறள்சிங்கமச்சம்,

நாமவேய ஞென்பானுற்ப வித்தவன்நாபியிற் புவனம்பலபூத்தோன், தண்டநேமிதனுவொடுவாள்சங்கந் தாங்கிவேலையறிதுயில்செய்யுங், கொண்டல்வண்ணன்பொன்னுலைப் பதியுறை கோலவீல நெடுமால் மருகன். (சக)

கொச்சகம்.

வேட்டுவன்வாயுண்டு மிழ்ந்தமிச்சி லுவந்தான்புதவன்
தோட்டுவளஞ்சூழும் சுழிபுரத்திலானைமுக
னாட்டுவளம்பேசியபின் நவ்விவிழிக்கொம்பனையார்
கோட்டுநனைமாவின் குயிலிசையைக்கேட்டாரே.

## குயில் கூவுதல்.

ஆனேறுயர்த்த கொடியந்தணனு வந்ததிருவாலயம் விளங்
கவே கூவாய் குயிலே. (௪௨)

தேனேறு கொன்றையணிசிவனெழுத்தஞ்சுமே
செகமீதினிலைபெறக் கூவாய் குயிலே. (௪௩)

மீனேறுகடலாலபோசனன் பரியான வேதந்தழைத்
திடக் கூவாய் குயிலே. (௪௪)

மானேறுவரிநயன மங்கையொரு பங்கனார்வாழ்
சமையமெய்யென்று கூவாய் குயிலே. (௪௫)

பூரிவரைமேலாரணப் போலியதனைப்பொறித்தபெரு
மானென்று கூவாய் குயிலே. (௪௬)

பேரியெனமாலொலி முழங்கிமையபூதரப்பிடிதங்
தகளிறென்று கூவாய் குயிலே. (௪௭)

மாரனையளித்த கண்ணன்புயங்கப்படிவமாற்று
பெருமானென்று கூவாய் குயிலே. (௪௮)

ஆரமணியாலை வயல்சூழ்தென்பறளை யுறையைங்கரனை
வாழ்த்தியே கூவாய் குயிலே. (௪௯)

வேறு.

ஆயிரம்பகுவாயனந்தனின் வீறுகண்டுயில் வாரிருந்தபொன்
னாலயம்பதிவாழவே கூவாய் குயிலே. (௫௰)

கோயிலின்னதிகாரமன்றெனவிசனன்புறுமாதொடொன்றி
ய கோணயங்கிரிவாழவே கூவாய் குயிலே. (௫௧)

ஆபிசுந்தரிசேயர்கன் குடிலேசர்மின்பொழிவேலர்
தண்கதிராபுரந்தனில் வாழவே கூவாய் குயிலே. (௫௨)

ஆயிரங்கலையாயுமண்டலவேதபண்டிதராயவந்தணர்
தெருஞ்விஞ்சையின்மீறவே கூவாய் குயிலே. (௫௩)

வேறு.

அரங்கேதாயுமயில்விழிகொள் சிவன்பாதியுமைபுதல்வன
யன்பேணு பரமனென்று கூவாய் குயிலே. (௫௪)

இரங்காழிபுடைவளையும் கிலங்கீறியுழுதசமரிளங்
கேழல் மருகனென்று கூவாய் குயிலே. (௫௫)

உரந்தாவுதசமகுட தரன்சாயவிசையினெறிந்து
கந்தாடுபெரியனென்று கூவாய் குயிலே. (௫௬)

பரங்காணநொடியில் வினைதவிர்க்கேதாடவுதவு
மொருபரஞ்சோதியிறைவனென்று கூவாய் குயிலே. (௫௭)

வேறு.

வரிசைவளர்திரிபதகை மரபினுரியவர்கிளைகண்மதிசெல்
வமேறவே கூவாய் குயிலே. (௫௮)

பரிசகலகலைநிபுண னதிபரத விதுரியபரிகுலனிவ
னென்று கூவாய் குயிலே. (௫௯)

விரியமுதமுறுமகுட மருவுமணிமுகுட முலைமின்னார்
விகாரனென்று கூவாய் குயிலே. (௬௰)

தரியலர்கண்மௌலி குனிவிசையரகுநாயகன்
சகமதனில்வாழவே கூவாய் குயிலே. (௬௧)

## கழிக்கரைப்புலம்பல். விருத்தம்.

விரைமலர்மேலறு காஸிசைகானிசைமேவுபருளையில்வாழ்
வரைகிழிவேலவனினிய சகோதரமதகயமாமுகனூர்
கரைபொலிவார்கடலேதிரையேசுறவேகழியேகயலே
யுரைமதுநீண்மழையேமயலோபெரிதோ தரிதோதரிதே.

## மழைகேட்டல். கொச்சகம்.

இருநிலத்துவேதியரும்ஏருழு வேளாளர்களும்
பரிவினுடன்கடல்வருணபகவானைக் கண்டிறைஞ்சி
விரிதிரைநீர்வளம்பெருகமேவு முயிர்ப்பயிர்தழையத்
தருமமொடுதரைவிளங்கத் தந்தருளீர்மழையையென்றார். ()

என்பனசொற்செவிப்புகுதவியல் வருணனேதுசொல்வான்
பொன்பயிலுஞ்சிவனும்புலி மகனும்வக்கிரித்தான்
வன்படைவாள்வலியசுரமந்திரியுந் தெற்கடைந்தான்
நன்பயன்மாமழைகேட்டீர் நாமினியெவ்வாறளிப்போம். (கசச)

ஆனாலுமோர்மதியிங்கறைந்திடுவ னீர்கேண்மின்
தேனாருமலர்ச்சோலை செழித்தகுழிபுரநகரிற்
கானார்மும்மதமழைபெய் கணபதியைக்கைதொழுதால்
வானாருமழைபொழிய வரந்தருமென்றனுப்பினனே. (கசரு)

எண்ணிவிடைகொண்டருளு மிருபிறப்பாளரைமுதலோர்
திண்ணமெனநினைந்துகொண்டு திருவாய்த்தகுழிபுரத்தி
லண்ணல்பரஞ்சோதிவிநாயகனை வலம்வந்திறைஞ்சிப்
புண்ணியரேயாங்களுய்யப் புனன்மழைநீர்தருதிரென்றார். ()

செப்புமொழிதனைவினவிச் செம்பவளமணிமேனிக்
கைப்பனையைங்கரனானக் களிறுகுழிபுரநகர்வாழ்
பைப்பணிகங்கணம்பூண்ட பரஞ்சோதியருட்கடவுள்
மைப்பருவமுகில்மாரி வழங்குமெனத்திரங்கியதே. (கசஎ)

## சந்த விருத்தம்.

செருகியதவளக்கணமுகிறமரத் திரைகடல்சுழியப்புன ல்பருகா, பொருசிலைபயிலச்சிறைவிசையுவணப்புனை துளவரி யொத்தொளிகருகா, தருமொலிகுமுறச்சுழிபுரநகரிற் சகமகி ழ்வரதக்கணபதியே, றிருநுதலணிபட்டமதெனமின்னி யெழு ந்திசை யெங்கணுமண்டியதே. (சுஅ)

கருமயிலாடக்குயிலினம்வாடக்கவியினமோடக்காடிபுல் வாய்,பொருபுலியாளித்திரள்மரைசாரற்புறமுழைபதறிக்கொ டுகிடவே, யருகுழைதவளக்குலமலைதகரத்தடதிகிரியின்முத் துதிர்தரவே, சொரிமலரகிலப்பலமரமுறியச் சோவெனமாரி பொழிந்ததுவே. (சுகூ)

## வேறு.

வெருண்டுவெரியுடல்சுருண்டுதுயில்புரிவிடங்கொளுரகமு நடுங்கவே, உருண்டுநிலமிசைபுரண்டு நடைமலையுடைந்துவித லையொடொடுங்கவே, மருண்டுகுளியதரிடங்கர்நெளிதர வர ம்பில்வனசரர்கலங்கவே, யிருண்டுபுவிமயில்கிழிந்துவிடதிரை யெழுந்து கனமழைபொழிந்ததே. (எ0)

## வேறு.

பணபதிசிரமிசைநிலவியபுகழ்பொலி படிமகளுதவியதிரு மருமான், மணமலிகுவளையமலர்செறிதொடை யணிவடகு வடனபுயவலிமையினன், இணரவிள்சிகழிகைவனிதையர்தி னமடலெழுதிய தனுமதனனையனையான், குணதரவரரகுநா யகமகிபதி கொடையெனமாரிபொழிந்ததுவே. (எக)

## ஆற்றுவரத்து - சிந்து.

பொருவில்கோணச்சிகரத்தருகிற் பொழிந்தவெள்ளம்வ ழிந்துபோய்ப்பூந்தண்குறிஞ்சிவளைந்து வேடிச்சிகாந்தன்சேவ டிவணங்கியே,

குருளைகோளரிவேழக்களபங் குருட்டுமொசுண முருட்டி யேகுறவர்குடி லுஞ்சிலையுமிதணுங் கொண்டுபாலை யடைந்து மேற்,

பருதிநயனச்சூலக் காளிபாதம்பணிந்துகழுகுடன் பருந் துநடுங்கக்குரவின்வேரைப்பறித்து முல்லையடைந்துபூங்,

திருவின்கொழுனன்சரணம்வணங்கித் தேங்குமாயர்பா டியைத்தேடி வெண்டயிர்ச் சாடிசாடிச்சிறந்தமருதம்புகுந் ததே. (௭௨)

வாய்ந்தமருதநிலத்திற்புகுந்துவயங்குகண்சதப்பத்தினன் வயிரம்பிடித்தவெள்ளைவாரணன் வனசத்தாளைவணங்கியே,

சேந்தபதுமங்குவளைகளைந்துதேக்கிக்காஞ்சியைத் தாக் கியேசென்னெற்குலமும்வெண்ணெற்குலமுஞ்சேர்த்துநெய்த ல்நிலத்திற்போய்,

ஆய்ந்தவருணன்சரணம்வணங்கியடம்பங் கொடியைப் பிடுங்கியேயடிகோண்முண்டகந் தடவுகடலையடையப் பறித் துப்பவளமுந்,

தோய்ந்தநித்திலக்குவையும்வாரிச்சுறவுக்குலங்கள் பத றவேசுழித்துத்திரட்டிவெருட்டியுருட்டித்துள்ளிவெள்ளம்பர ந்ததே. (௭௩)

சூறவைவாளையுளுவைமயிந்தன் குப்புளாவுடன் றிருக் கைமீன்கொழுத்தமடவைதொகுத்த கிளிகுமிளாமாசினிசெ ங்கண்ணன்,

உறுகிழாத்திகாலைபாலையோங்கு திரளிவச்சிரமூடகத்து டன்சூடைசெப்பலியுற்றநெடுவாலூடகம்,

பறவையுறவிகுளக்கன்ஞெரைகைப்பருந்துவாயன் மட்டிமீன் பாரக்கெண்டைதடியன்சிலாப்பாரக்கத்தலையாரல்மீன்,

கறுவிக்கரையில்வழைகளோதுக்கிக்கதித்துக் குதித்துப் பாயவேகங்கையாறுபெருகிவாற காட்சிபாரும்பள்ளீரே. ()

தாவுகெளிறுவாராலாரல்தகுவெள்ளாரல்தும்பையன்சா லுமாம்பழக்கெளிறுசின்னத் தராளங்கறுத்தகெளிற்றுமீன்,

வாவுகருங்கண்வாளை பவளவாளைமூக்கன்வாளை கோவ ஞ்சிகடியன்பொதியன்கெளிறுவவ்வால்வெள்ளைவவ்வால்மீன்

ஓவினெடியவாயன்மடவைபுரியமணலைக்கூரலோடோ டும்பூனைக்கண்கெளிறுவயலினாதிக்குங்காணியாளனும்,

பூவின்றடத்தில் வயலிற்பாயப் புறத்துப்பாயப் பாயவே பொருதுமாவலிகங்கைவாற புதுமைபாரும்பள்ளீரே. (எரு)

திருக்கைபுலியன்றிருக்கையாரற்றிருக்கை கள்ளத்திருக் கைமீன்சிவந்ததிருக்கைசட்டித்தலையன் சிறுந்திருக்கைவெ ட்டியான்,

தருக்குங்குறிஞ்சித்திருக்கைகருமைதயங்கிறாலொடுவெ ள்ளிறால் தண்டைச்சூறவுமொய்முரல் கிளைதக்கன்பாரைக்க ல்லிறால்,

உருக்கமுடையகெண்டைக்காரலூர்த்தவெள்ளை வாற் றிருக்கைமீன்ஒலைவாலன்கருங்கண்ணாளன்ஊரிற்பெரியமீனெ லாம்,

வருக்கமுடைய பூகராசியின்மடைத்தலைதத்திப்பாயவே மாவலிகங்கைபெருகிவாறவளமைபாரும் பள்ளீரே. (எசு)

புகழ்தல். கலிப்பா.

பஞ்சவர்தூதுரைத்தவன் பொன்னாலைவாழும் பவளவா ய்முகில்மருகன்பனைக்கைநால்வாய்க், குஞ்சரமா முகப்பெரு மான்றென்பருளைக்கோடொன்றன் மணிவரைப்பூங்கொம்ப னாரே, நஞ்சுபழகியவுமதுகண்கள்வேலோ நகைவதனங்குளி ர்மதியோ நகைத்தண்கோதை, அஞ்சனவார்குழல் பருவமஞ் சோவேலையம்பவளமோ கனிவாயதரந்தானே. (எஎ)

பண்ணைக்காறன் தோற்றம் - சிந்து.

மாறுகண்ணுஞ்சோகிப்பாகிற் பல்லினழகுஞ் சுத்தமாவ ளந்தாழிபோலே வாயினழகுஞ்,

சிறுசளியாற்பெருத்த துள்ளுநாசியுங் கொட்டைதிரித்த பருத்தியின்பைக்கூறைவயிறுங்,

கீறிவேறுதசையொட்டிவைத்திடுகாதுஞ் சற்றேறகிடுகுக ட்டிப்பெற்றமுட்டிக்காலுமாகவே,

ஆறுமுகவேலர் துணையார்வடிவமோர் பதினாறனார்பண் சேரும்பண்ணைக்காறனார்வந்தார், (எஅ)

காதளவுசென்றவிழிக்கஞ்சனந்தீட்டிமலர்க்காந்தளங்கை யாடகம்பொற்சூடகஞ்சூட்டித்,

தாதளவுகோதைக்குமென்கண்ணியுஞ்சூட்டிமுலைச்சந்த னச்சேறுட்டி

நறுங்குங்குமங்கோட்டிச்,சோதிமணிநீலமயில்போலவியல் காட்டிமரைச்

சுந்தரச்சிறடியிற்செம்பஞ்சுவைத்தூட்டி, ஆதிபரஞ்சோ திநாத

வேதகீதனார் பண்ணையாண்ட வரைக்கண்டுதொழவாரு ம்பள்ளீரே. (எகூ)

ஆண்டையை வணங்கல்.

குட்டச்சொறிமேனியாரேகும்பிடுகிறேன் உப்புக்கொட் டுப்போல்வயிற்றனாரேகும்பிடுகிறேன்

சட்டிவைத்தமுகத்தனாரேகும்பிடுகிறேன் தூங்கற்சண் ணைக்கடாவழகனாரேகும்பிடுகிறேன்,

கட்டைமூளிக்காதனாரே கும்பிடுகிறேன் மதிக்கார்த்தி கைமாங்காயனாரேகும்பிடுகிறேன்,

அட்டைவாயுதட்டனாரே கும்பிடுகிறேன் பண்ணையாண்டவரே யாண்டவரே கும்பிடுகிறேன். (அo)

## கலிப்பா.

பார்மதிக்கவருஞ் சோழமண்டலப்பள்ளி பள்ளனையுள்ளாக்கிவைத்தபின், ஊர்மதிக்குநிகர்வதனும் புயத்தொருத்தி மூத்தவளாலே யுணர்ந்தபின், கார்மதித்தகுழலிளையாடன் மேற்கண்சிவந்துகறுத்தாண்டைசீறிடவே, பார்மதிக்கும் வயற்செய்கைபார்த்துடன் வருதல்போற் பள்ளன்வருகின்றானே. (அக)

## விதைவகைகேட்டல் - சிந்து.

பொருப்பினெல்விதைக் கோட்டையினீட்டிய பூட்டுநாளுகத்திட்டமுஞ்சிந்தை, விருப்புமேழிக்கலப்பைவகையும்மண்வெட்டியும்பொற்கொழுவின் வகையும்,கருப்புவேலிப்பருளையில் வாழுமுக்கண்ணனார்பண்ணை மாட்டின்வகையும், இருப்பும்போனசெலவுநன்றாய்நீகணக்கேற்றிச்சொல்லீழமண்டலப்பள்ளா. (அஉ)

சிந்துரத் துணைபுள்ளநாயன்பணி தென்பருளைப் பரஞ்சோதிநாத, தந்தியேறியவாகனந்தின்றசமைந்தநெற் கோட்டையாயிரங்காணும்

வந்தபாவலர்வெங்கலிதீர வழங்குங்கோட்டையோ ரைந்நூறுகாணும்,

இந்தநாளினிலென்பொருளாய்வைத்திருந்ததோர் வட்டுக்கோட்டையொன்றுண்டே.

தெற்றிக்காளைகழுத்தால் நெரிக்கச்சிதைந்துபோன நுகமொருகோடி, சுற்றிப்பூணுங்கயிற்றாலழுந்தத்துளைபறிந்ததிரு நூறுகோடி,

இற்றைநாளுகமொன்றையுங்காண்கிலனேழுநான்கிலொன்றில்லாதநாளில்,

மற்றப்பாம்புக்கும்பூரத்துக்கும்பகல்வைத்தநாளுகமொ
ன்றுண்டேயாண்டே. (௮௩)

கத்திவேலம்புவில்லுடன் தெண்டையங்கட்டுவாங்கங்க
ருந்தாதுலக்கை, பைத்தபாம்புவன்பாசந்திரிசூலம்பரித்தவீர
ப்பரஞ்சோதிமூர்த்தி, முத்துநெல்வயலோரந்திருத்த முறிந்த
தையிரண்டாயிரங்காணும்,வைத்தமண்வெட்டியொன்றுவை
த்தேன்மனமஞ்சிப்பார்க் கிறேன்காண் கிலனுண்டே. (௮௪)

அக்கமாலைகமண்டலம்புத்தகமாடல் வெங்கதையேந்தி
ய மேலோர்,

திக்கெலாம்புகழ்வீ சுஞ்சுழிபுரத்தென்பருளைப் பரஞ்
சோதிநாதர்,

தக்கபண்ணையுழுதிடத்தேய்ந்தனசாற்றில் மட்டிலக்கே
யில்லையானல்,

மிக்கவீரரகுநாயகன் கொடிமேழியொன்றுண்டு காட்டு
வேனுண்டே. (௮௫)

வன்னச்சோதிநீலோற்பலமோர்கதிர் மாதளம்பூமணிவீ
ணைதாங்குந்,

தன்னைத்தானனையார்தென்பருளையிற் றம்பிரான்றன்வ
யலுழுகாளை.

பின்னர்ச்சாலினிற் சங்கினிற்றட்டப்பிளந்து போனகல
ப்பையனந்தங்,

கன்னத்தோர்குண்டலப்பலதேவன்கரத்திலே யோர்க
லப்பையுண்டாண்டே. (௮௬)

வேணிக்கங்கையூர்காதலர்வாலுளை வெண்சிங்காசனமே
றியபோதர்,

சேணிற்கண்விஞ்சையர்பணிந்தேத்திய தென்பருளைவி
நாயகர்நாட்டில்,

ஆணிப்பொற்கொழுவெல்லாம் நிலம்பட்டழிந்துகூர்மை யகன்றதனேகம்,

மாணிக்கஞ்சொன்னகோவையிலே கொழுவைத்திருப்ப து பார்மின்காணுண்டே. (௮௭)

செழுநிலாமதிக்கண்ணிச்சடாடவித் தேவனுருக்கொரு காளைபோச்சு

வழுவில்கோடியுருத்திரரென்றுளர்வாங்கினுரந்தமட்டறி யேனுன்

பழுதில்லாநாரையொன்று குளந்தத்தப்பாய்ந்துபோகிய தாவிந்தப்பூமி,

உழுதகாளையொன்றுண்டதுபொன்னுலே யூரிலேவாருங் காட்டுவேனுண்டே. (௮௮)

கொச்சகம்.

சிந்தைமதிக்கெட்டான்செழித்தபண்ணையாண்டவனுக், கிந்தவகைபள்ளனியம்புமொழியைக்கேட்டு, வந்தகுலமூத் தாள் வறிதுநகையுந்தோற்ற, மூந்துகுடும்பன் சரிதைமுழுதவிக் கத்தொடங்கினளே. (௮௯)

முறைப்பாடு - சிந்து.

பண்புநீதியறியாததாக்குணிப்பள்ளன் செய்கருமங்களை க்கேளு,

மூண்பதுங்குடிப்புங்களிப்புங் கண்ணுறக்கமுமிளையாள் குடிலோடே,

எண்பொருந்துமென்புத்தியுங்கேளான் யானும்பின்னையு ரைப்பதும்விட்டேன்,

பெண்பிறந்தநான்மட்டுமோ விந்தப்பேச்சையார்க்கினி விள்ளுவேனுண்டே. (௯௦)

கட்டுநீர்வயற் செய்கையுந்தீண்டான் கலகப்பள்ளிமயல் வலைப்பூண்டான்,

பட்டியின்மாட்டைக் கிட்டியும்பாரான் பழையதாரமெ ன்றென்னையுஞ்சேரான்,

சட்டைக்காறியைவிட்டும்பிரியான் சற்றேபிரிந்தாலுமிங் குத்தரியான்,

பெட்டிச்சோற்றுக்குங்கள்ளுக்கும் நெல்லெல்லாம் பெ ட்டியாலள்ளிக்கொட்டினானாண்டே. (கக)

தாரதிட்டியன்றன்பண்ணைபாரச்சுமையென்றனிரை த்தூண்டிவிட்டார்க்குப்,

பாரமெல்லாமிதப்பிற்கண்ணு மிந்தப்பள்ளனுக்குக் கண் பள்ளத்திமேலே,

தாரமென்றென்கழுத்தின்முன்னளிற்சறடுகட்டியபார தம்வைத்தோன்,

ஆரபாரஞ்செய்கோட்டுக்கும்பாட்டுக்கு மாட்டுக்குஞ்ச மத்தாயினனாண்டே. (கஉ)

வேறு.

மஞ்சொத்தகுழலாளிளையவள் குஞ்சுக்குமுதலாநெல் லு மணிவிற்றுத்தட்டான் கையிற்பணிசெய்வித்திட்டான், வ ஞ்சத்துக்குரியாள் கற்றவிஞ்சைக்குப்பெரியாளிட்ட மருந்து க்குவிருந்தாகிக்கொண்டிருந்துட்கிக் கரைந்தான், கஞ்சிக்குப் பிறகேநின்று கெஞ்சிக்கொண்டிருப்பானவள் காலையும்பிடிப்பா னவள்சொன்னநாகமும் பிடிப்பான், பிஞ்சுற்றமதிநேரொற் றைக்கொம்பத்தகரியா னெட்டிப்பிடியுங்கைச்சவுக்காற் கட்டி யடிமின்காணுண்டே. (கங)

ஒச்சமடியடித்தாலென்னபோச்சிவன்குடும்பனிந்த வூருக் குமிணங்கான்றலையாரிக்கும் வணங்கான், பூச்சியமுறையன போச்சுமுபடைச்சால் வழிபுரிவளைக்குலஞ்சேர் சுழிபுரநகர

பெருமா, ஞச்சியங்கவர்ந்தா னெதிர்வருபேச்சிகொங்கையின் பாலுண்டவரிக்கொருமருகன் பண்ணைநிலைத்திட வேண்டிற், காச்சுலையடித்தேயறத்தோச்சிடுமிரும்பாற் பண்ணிக்கடுவிலங் கிடவேயினித்தடை செய் யீராண்டே. (கூச)

## விருத்தம்.

பள்ளனிருகாலினுக்குவிலங்குபூணப் பண்ணுவித்தாளென் றிளையபள்ளிகாணு, வெள்ளளவுமிரக்கமென்பதிலையோவாண்டைக்கென்னபழியென்றிரங்கிக்குழைந்துபோனாள், கள்ளவழியாலீழப்பள்ளிபோந்துகள்ளும் நல்லகொழுத்தமறிக்கறியுங் கூட்டித், துள்ளியுள்ளவகந்தையினுற் காலிற்பூண்டதொடுவிலங்குப்பள்ளனுக்குச் சோறிட்டாளே. (கூரு)

## பள்ளன் மூத்தபள்ளியை வேண்டல் - சிந்து.

பட்டநெஞ்சிலடாதனசெய்தார் படாதவெல்லாம்படுவார்களென்கை, கெட்டியாயறிந்தேனினி நீயிட்டகீற்றையுங்கடவேனொருக்காலுங், தொட்டகோபந்தவிர்கணக்காம் படிசொல்லுவேனுங்களாண்டைக்குச் சொல்லித், தட்டுகொற்றளைநீக்குவித்தேயென்னைத் தாங்கிக்கொள் ளீழமண்டலப்பள்ளி. ()

## மூத்தபள்ளி ஆண்டையை வேண்டல்.

கண்ணிலேகரந்தீண்டிவிட்டா லந்தக்கைவிரல்தறிப்பார்களுமுண்டோ,வண்ணமானமுலைவிழுந்தாலவ்வயிறுதாங்கக்கடனல்லவோதா, னண்ணல்வாரியுலகத்திலே யடியாதகாடுபடியாதவென்கை, திண்ணாந்திண்ணஞ்சிறியோர்செயும்பிழைபெரியோர்பொறுக்கக் கடனுண்டே. (கூஎ)

ஒறுத்ததாற்பயனென்பொறுத்தாருக்குலக முள்ளளவும்புகழென்றே, மறுத்தவிர்ந்திடுவள்ளுவனுர் சொன்னமானவெள்ளைக்குறளறியீரோ, வெறுக்கைபோதுமினியெளியான்பிழை

மேன்மையாக் கணக்கொப்புத்தருவான், செறுத்தகாவலில் வைத்திடுபள்ளனைச் சேர்த்தகாற்றளைமாற்றுவீராண்டே. ()

## விருத்தம்.

ஊசல்வடமூர்சகடமுழுன்றிடுபம்பரம் பேய்த்தேரொத் தவாழ்விற், பாசமிகுமறவிதனக்கீடாக வருந்துதல்பாராதடுதே தோ, வீசுகதிர்ச்சலஞ்சலங்கண் முத்தநிலாவொளியெறிப்ப வேரியேறி, வாசமிகுகுவளைமலர்சுழி புரத்தாலயத்திறைற் றைமருப்பினனே. (கூகூ)

## பள்ளன் ஆண்டைக்குக்

## கணக்கொப்பித்தல். சிந்து.

குட்டைநாம்பன்வெள்ளிக்கண்ணன்குறுங்கழுத்தன் கூ ழைவாலன்வெடிவாலன்வட்டச்செவியன், மொட்டைத்தலை மோழைக்காளை புள்ளிக்கறுப்பன்முறிகொம்பன் றறிகொம்ப ன்சுத்தக்கறுப்பன், பட்டிக்காளைகுன்றுமணிக்கண்ணன் மயி லைபால்வெள்ளைநாரைக்காளை காவிற்சிலம்பன், துட்டக்கள்ள ன்வளைகொம்பனொற்றைக் கொம்பனொர்பண்ணை சூழ்ந்தபலமா ட்டின்வகை சொல்விேனாண்டே. (க00)

மாட்டுவகையும்பவளத்தாலுழக்கோலும் பரிமளச்சந்த னமரத்தாற்செய்படவாளும், நாட்டுமணிமேழியுங்கைவச்சிர நுகமுஞ்சுட்டநல்ல பொன்னினற்சமைத்த கொழுவகையும், சேட்டிளம்பருதியின்பிரகாசமுடையார் தூயதென்பருளையு ன்பர்நண்பர்செய்யுமருளார், தோட்டுமலர்ப்பொன்னிதழிச்சூ ட்டார் பண்ணைக்கேவெள்ளிச்சோதி நாஞ்சிலின்வகைகள் சொல்விேனாண்டே. (க0க)

பார்புகழுங்குண்டைச்சம்மா விஞ்சருச்சுனம்பஞ்சபாலை பசுங்கற் பூரவாடைக்கறுப்பன், சேருமணல்வாரிகுளவாளை கறுப்பன்சின்னட்டி பொன்னுயகன் சொற்காடைக்கறுப்பன்,

சிரியலைழகியவாணன்மங்காமைக்காத்தான் பேணுஞ்செம்பவளச்சம்பாமுத்துமாலைக்குறுவை, வார்கருப்பஞ்சாற்றினுற்றல்விற்றிருப்பதோர் பண்ணைவைத்துக் கட்டுவித்துவகைசெப்பினேனுண்டே. (௧௦௨)

தலைவன்பொருள்வயிற்பிரிந்துழித்
தலைவிவருத்தம் பாங்கிகூறல்.

கலித்துறை.

சங்கத்தையேந்தும்பரஞ்சோதிநாதர் சயிலமின்னார், புங்கத்தைவாய்ந்தமணிநீலப்பார்வைபொலியுமுத்து, மங்கத்திலேற்றிடுதங்கத்திற்பீருமுண்டாயிருக்க, வங்கத்திலேறித்தனந்தேடப்போனவர்வந்திலரே. (௧௦௩)

முகூர்த்தங்கேட்டல். சிந்து.

செம்பருதிவாரமதிற்பூரணையென்றார் தேட்கடையென்றார் சித்தயோகமுமென்றார், கும்பமுகூர்த்தமென்றார் செம்பொன்னகோரையென்றார்குஞ்சரகரணமென்றார் கூடிப்பெரியோர், நம்புகலப்பைச்சக்கரம்நன்றாய்ப் பொருந்துமென்றார் நாயகரெமைப்புரக்குநாதனார் நாட்டில்,வம்பவிழ்பூம்பண்ணையிலேர்ப்பூட்டியுழுவேநன்மனத்துடனே போதியீழமண்டலப்பள்ளா. (௧௦௫)

வேறு.

ஊற்றுதேன்பொழில்சூழ்தென்பறுளையுகந்த ஞானப்பரஞ்சோதிதன்னைப், போற்றிக்கொள்ளறியாமற் பொன்னேரினைப் பூட்டிச்சால்விட்டுழுகின்றநேரந், தோற்றுமேற்றுக்குறுங்கண்ணன்வாளை பீன்றுள்ளிப்பாயநுகத்தைமுறித்துச், சீற்றக்காளைவெருண்டுகொம்பாற்குத்தச் சேற்றிற்பள்ளன்விழுந்தான்காணுண்டே. (௧௦௬)

வேறு.

பள்ளன்பண்ணைமீதுவிழவே மூத்தபள்ளிபரிதவித்துமுகத்திலறைந்து, துள்ளிவிழிநீர்சொரியவேயழுதழுது சோதி

முலைப்பந்திலடித்துக், கள்ளவிள்பூங்கோதைகுலைய விழுந்தெ
ழுந்து கனன்மெழுகினுருகியிளைய, குள்ளிமருத்தீட்டின் மய
க்கோ நாச்சிமார்தங் குறையோ வென் றழுதிரங்கினாள். ()

இரங்கல். கொச்சகம்.

தேன்கிடந்ததொடையானே தேடரிதாங்கண்மணியே
வான்கிடந்தபுகழானே மலைகிடந்ததோளானே
யூன்கிடந்தமெய்தளர்ந்தே யோவியம்போல்வயலணையி
லேன்கிடந்தாயென்னகுறையின்னதென்றுசொல்லாயே. ()

கண்ணனுதற்கண்ணனருள்காரியையனார்குறையோ
விண்ணினிடிமின்னுமல் வீழ்ந்ததையாவென்புகல்வே
னுண்ணறிவுமுயிர்ப்புமின்றியொடுக்கமுடனீகிடந்தாற்
பண்ணைவகைதமைப்போந்துபார்ப்பவரார்காப்பவரார்.

கொங்கையுரந்தடியாக் குழன்முடியாக்காலத்தே
மங்கலநாணெனக்கணிந்து வரைந்ததுவுமறந்தனையோ
பங்கவயற்செய்கைசெய்யப் பரஞ்சோதிகாக்குமென்று
செங்கையினீர்தெளித்திடவேதெளிந்துபள்ளனெழுந்தனனே

வெண்பா.

சுத்தர்பணிந்தேத்துஞ் சுழிபுரத்துவீற்றிருக்கு
மத்தபரஞ்சோதியண்ணலே - கைத்தலத்துச்
சூலந்திரித்துமுனந் தோன்றுலகாலமெனக்
காலன்வரும்போது கா. (கக௧)

சிந்து.

உழுதுபரம்படித்தேதன் சாலிவிதைதனை யுண்மைபொலிந
ன்முகூர்த்தந்தன்னில் விதைத்தே, னளவாய்முளைத்தபின்பு
நீர்ப்பாச்சினேனம்புயனும்மாதவனும்போற்றித்துதிக்கு, மழு
களிறுனபரஞ்சோதிப்பெருமான்வழங்குகருணையின் வளர்ந்த
நாற்றைத், தொழுதுநடும்வடிவுகாணவாரும் சொல்லவந்தே
ன்காணும் பண்ணைக்காரனாரண்டே. (கக௨)

## விருத்தம்.

காமன்மகிழ்மைத்துனனார் பொன்னாலைப்பதியிலுறை காயாமேனி, மாமன்மகிழ்மருமகனார்சுழிபுரம்வாழ்பரஞ்சோதிவரதர்நாட்டிற், பூமகள்கேழ்வனையனையகாளையுடன்றழல்வடவைபொங்குகானிற், சேமநிதிமங்கலமான் சிறடிவைத்தெவ்வாறுசெல்கின்றாளே. (௧௧௨.)

## நாற்றுநடவு. சிந்து.

திங்களாடப்பணியுமாடத் திருச்சடாடவியாடவே செறிந்தகனகக்கடுக்கையாடச் சிந்துரத்துரியாடவே, அங்கைமான்மழுவாடவும்புலியரவமாட மன்றினிலாடினாரவர்சேய்பருளையமர்பரஞ்சோதிவயலுளே, கொங்கையாட மகரக்குழைபுங்கொப்புமாடச் சுரும்பினக்கோவையாடக்கோதையாடக்கோலமுத்தாரமாடவே,சங்கமாடச்சரிகளாடத்தனத்திற்கச்சசைந்தாடவே தயங்குநாற்றையொருவர்க்கொருவர் தள்ளிநடவாரும் பள்ளிரே. (௧௧௩.)

சின்னிவன்னிநாகிபேசி திருவியுருவிகுருவியுஞ் சேவியாவிபூவியேவி செல்லிதன்னுடன்வல்லியும், பொன்னிகன்னிவேவிபாலி புளுகிசிவப்பிகறுப்பியும் புலிச்சிகலிச்சிவிரிகுரி பூமியுடனேசோமியும், பன்னுசுருதிமுனிவர்க்குரிய பரன்பருளைப்பதியில்வாழ்பவளமேனியன் வயலில்நாற்றைப்பாடி நடவாரும் பள்ளிரே. (௧௧௪)

## வேறு.

மருதிடைத்தவழ்பசியவித்தகமரகதப்புயல்மருகனார்வலைவைபக்கலிலுறையுமுத்தமமதகயத்திருவதனனார், சொருகுகொத்தலரளக முக்கணியுமையளித்திடுபுதல்வனார் சுழிபுரப்பதியாலயப்பரஞ்சோதிநாயகர்வயலுளே,பிருவிழிக்கயல்சுறவுகிட்டுறவிரலணித்தொகைபிறழவேயிடத்திற்றொடுத்து முடித்தநாற்றை யெடுத்துநாங்கணடச்செய்தேம், வெருவிமுட்டொ

திபலவினிற்கனி சிதறலான்மிகத்திடுக்குடன் விழுந்து மீன்கள் குதித்துப்பாயும்விதத்தைப்பாரும்பள்ளீரே. (ககரு)

தண்ணென்றுடையவிதழிப்புங்கவன்றந்தகூரொற்றைக்கொம்பனார் தாரணிப்புவனபூரணப் பரமகாரணப்பொருளுமாயினார், வண்ணஞ்சிவந்தபுரத்தினார் தொந்திவயிற்றின்முப்புரிநூலினார் மஞ்சுசூழ்பொழிற்றென்பருளையில்வாழ்பரஞ்சோதிவயலுள்ளே, பண்ணினிசைந்தசொல்லிலே நுதல்வில்லிலேயிணைவில்லிலே முலைவல்லிலேமுல்லைப்பல்லிலே யரைப்பணத்திலேமஞ்சள்மணத்திலே, கண்ணிலஞ்சனத்தீட்டிலே நுதற்சூட்டிலே குழைத்தோட்டிலே குழற்காட்டிலேயிசைப்பாட்டிலே தலையாட்டினானடி பள்ளீரே. (ககசு)

தேடிப்பொருளைப்புதைத்துக் கொழித்துத் தெளித்துக் குழைத்துவடித்தநூற்றெள்ளுநாவலருள்ளமேலுறைதேவனார் திரிகோவனார்,வாடிச்சிறுகுமிடைப்புலோமசைமகிழ்நன்பூசித்தவராசனார்மண்டலம் புகழ்தென்பருளைவாழ்பரஞ்சோதிவயலுள்ளே, கோடிவளைந்தகரும்புருரங் குனிக்குமிந்திரசாபமாக்கொடி மருங்குன்மின்னாகவே நுதல் குழவிப்பிறையினிலங்கவே; யாடிச்சரிந்தகோதைமேகங்களாகத்தாளக்கோவையையாலிக்குலமென்றுபீலிக்குலமயிலாலிப்பதைப்பாரும் பள்ளீரே. (ககஎ)

நாளுங்கலியைத்துரப்பதேயன்றி நாளைவாவென்றுரைத்திடான் நம்பினோர்க்கருள்தருதயாபரன் வெம்பினோர்க்கரியேறனான், வாளின்றடக்கைச் சந்திரசேகரமானாமுதலிவாழவே வரந்தந்துதவுதென்பருளை வாழ்பரஞ்சோதிவயலுள்ளே, தாளிற்பதுமராகச்சுவடுதயங்கு சுப்பிரம்பதியவே சருவிச்சருவிபொருவர்க்கொருவர்தயங்குநாற்றுநடுகைக்கே, மீளத்திரும்பிப்பள்ளனைப்பார்த்து வெண்ணகைத்தாளங்காட்டவேவெருவிப்பங்கயங்குவியக்காவிகள்வெடிப்பதைப் பாரும்பள்ளீரே. ()

வேறு.

அத்திம்மணிச்சுடிகைத் துயிலிற்பயில் பச்சைமுகிற் கொரு
மருகனை, ரத்திமுகத்தவர்சித்தர் விழித்திரியற்புரவித்தகர்வய
லுளே, முத்துமுலைச்சியரக்குவலைச்சியரந்றவிடைச் சியர்நடு
கைக்கே, முத்தையனத்திரண்முட்டையெனச்சிறைகட்டிய
ணைக்குதுபள்ளீரே. (௧௧௯)

வேறு.

வடிக்குஞ்சகலகலைகள்போற்றும் வள்ளலைங்கரனட்டிலே
தெரிக்குங்கழனிப்பயிர்கள் வளர்ந்துசெறிந்து விளைந்துசரிந்
தவே. (௧௨௦)

வேறு.

தேன்பயிலுந்தடஞ்சோலைப் பெருந்தென் பருளையினுத
ன்றிகழ், வான்செறியும்பண்ணைமீதே கதிர்வாய்க்குங்குலைச்
சென்னெருனே, கூன்பிறைநேரிரும்பாலே மள்ளர்கொய்து
கொய்தேவைக்கும்வேலைக்,கான்செறிதாமரைப்பூமேலன்னங்
கண்டுயில்பாரும் பள்ளீரே. (௧௨௧)

கொந்தவிழ்தாமப்பொற்றொடையான் மதகுஞ்சரவானனமு
டையானனுகூலன் றிரிசூலன் றருபாலன்புனைநூலன், கந்த
னைவாய்த்திடு துணையானன்பர்கருத்திலே யன்றியணையான்ற
ளைகாதன்றெய்வநாதன் சிவபோதன்றிருநாட்டில், செந்துவர்
க்காய்க்குலைகனத்தேய்வயற்சென்னெற்குழாங் குயத்தாலேய
ரிதீரம்மரிதீரம்மரிதீரம்மெனுநேரம், வெந்திறல்வேலையடர்த்
தேவரிமேவுகயற்கண்ணியாரே வாழைமேற்றிண்குலைத்தாற்
றின்கவியேற்றந்தனைப்பாரீர். (௧௨௨)

வீறுபர்பாரதக்கதைநூலம்பொன்மேருவிற்றீட்டியபெ
ருமான் றிரை, யாறணிசேகரன்மருமானனைமாமுகன்றன்றி
ருநாட்டில், காறகையாவெழுசாலிப்பசுங்காயடியோதையை
க்கண்டேவயற், சேறளைமீன்குதித்தறுமீன்மட்டுஞ் சேர்வது
பாரும்பள்ளீரே. (௧௨௩)

பருளைவிநாயகர்பள்ளு முற்றிற்று.

---

☞ இதன் இறுதியிற்சிலசெய்யுள் இறந்தன ; இது பிரதியொன்
றேயுள்ளதுகொண்டு ஒருவாறுதிருத்தி அச்சிடப்பட்டது.

உ

இ ஃ கு,

## ச. சிவப்பிரகாசபிள்ளையவர்களியற்றிய

## சுழிபுரம்

# பறாளை முருகர்

## இரத்தினத்திரயம்.

---

திருவளர்கமலநன்மலருறைபவனுந் திகிரியைமுதலையில் விடுமொருமுகிலும், இருவருமடிமுடி தருவினர்மலையவிருள் கெடவெழுமரனுதல்விழிவருவோய், குருவெனவழிபடுகுறுமுனிக்கருணற்குணமுளதமிழியல்வரன்முறையருள்வாய், சுருதியின்முடிவினின்வருமொருபொருளேசுழிபுரநகருறைசுரர்குலபதியே. (க)

கருவினின்வருதலையொழியமபடர்கள்கடுகிமுன்வருதலைநசியிருகனக, மருவியமலையெனவருதனமடவார்மரபினின்வழிசெலுமனமதையொழிநின், இருதிருவடியெனதுளமனவருள்வாய்யிமையவடருசரவணபவகுகனே, சுருதியின்முடிவினின்வருமொருபொருளேசுழிபுரநகருறை சுரர்குலபதியே. (உ)

தருநிழலரசுசெய்மகபதிமுதலோர்தமதிடர்களையமுன்னரன்விழிவருவோய், அருவமுமுருவமுமருவுருவமுமென்றறைநவவடிவமுன்னரியவொர்சொருப, திருவருளறுமுகசரவணபவமெய்திழ்தருகுகவெனையடிமைகொண்டருள்வாய், சுருதியின்முடிவினின்வருமொருபொருளேசுழிபுரநகருறைசுரர்குலபதியே. (ங)

---